CASE NO : CP 2/2024

NAME : PW1 – R. மயில்சாமி

DATE : 08.08.2025

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி,

என்னுடைய பணிக்காலத்தில் என் கீழ் பணிப்புரியும் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை சங்க உறுப்பினர்களுக்கான loan margin 2% யை எடுத்து தான் வழங்கினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் சங்கம் மூலமாக ரூ. 1,00,000/- நான் கடன் பெற்றுள்ளேன் என்றால் சம்பள கடன் பெற்றுள்ளேன். அது தற்போது ரூ. 5,79,172/- நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் எனக்கு சாதகமான சங்கத்தின் தலைவரை வைத்து தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முறைப்படி JR யிடம் பணிவிடுப்புக்கு அனுமதி பெறாமல் எனக்கு தேவையான சங்க தலைவரை வைத்து பணி விடுப்பு பெற்றுள்ளேன் என்றும், எனக்கு எதிராகதண்ட தீர்வு நடவடிக்கை ஏதாவது எடுத்து விடுவார்கள் என்று பயந்து நான் முறைப்படி பணிவிடுப்பு பெறவில்லை என்றால் சரியல்ல. எங்கள் சங்கத்திற்கு அரசாங்க நிதியுதவி இல்லை என்றால் சரிதான். அரசாங்க நிதியுதவி நியாயவிலை கடைகளுக்கு மட்டும் வருடத்திற்கு ஒரு முறை மானியமாக வழங்கப்படும். அதேபோல்

IRDP scheme ரு. 2,14,479/- தொகையை நான் வசூல் செய்யாமல் நிதியிழப்பை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன். Animal loan வழங்கியதை நான் முறையாக வசூல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கறவை மாடுகளுக்கு மட்டும் ரூ. 10,00,000/- 2017 ம் ஆண்டில் 5 ஆண்டு காலத்திற்கான தவணை முறையில் நில அடமானத்தின் பெயரில் வழங்கிய கடன் தொகையை 2022ல் முடியக்கூடியதாகும். நான் 2019 ம் வருடத்தில் ஓய்வு பெற்றதால் அந்த காலத்திற்கான EMI தொகை முறையாக வசூல் செய்யப்பட்டது. Consumber loan கொடுத்த தொகையும் வசூல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது எதிர்மனுதாரர் சங்கத்தில் ஒருவர் தான் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய உறவினர் பெயரில் தங்க நகைகளை அடமானம் வைத்து ரூ. 15,00,000/- கடன் பெற்றுள்ளேன் என்றும் அதை திரும்ப செலுத்தாதல் தற்போது ரூ. 30,00,000/- நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது ரூ- 20,00,000/- தான் நிலுவையில் உள்ளது எனது மகனின் திருமணத்திற்கான நான் மேற்படி நகைகளை அடமானம் வைத்தேன். நான் ஒரு தொழிலாளி அல்ல என்பதால் 18(1) settlement ன் படி நான் எந்த வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. என்னுடைய 36 வருட பணி காலத்தில் நான் தொழிலாளர்களுக்கு PF contribution தொகை வசூலித்து சரியாக செலுத்தவில்லை என்றால் அது சரியல்ல. நான் முறையாக செலுத்தியுள்ளேன். அதற்கான பதிவேடுகளும்

பராமரிக்கப்பட்டுள்ளது. நான் பல்வேறு இணங்களில் கோரியுள்ள ரூ. 38,35,039/- சரியானதல்ல என்றும் அது கற்பனையானது தான் என்றால் சரியல்ல. இந்த மனுவில் கோரியுள்ள ரூ. 21,37,523/- சரியானதல்ல என்றால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.